286

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 AUG 1943
286.

C. Venkatachalam
S. 1941-43.

Editor & Publisher ... Lourduswami, B.A., L.T.
R. ... ning School, Trichinopoly.

3L
ணை211, N11;88
M43·34·2
189979

கெ... ஆகஸ்டு 1943 மலர் 2

R. ... றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு $1\frac{1}{4}$.

போதனு விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	21
2.	அணியியல்	23
3.	தாயும் சேயும்	24
4.	சரித்திர பாடத்தில் கால உணர்ச்சி	26
5.	யோசனைக் கணக்கு	27
6.	விடுகவிகள்	27
7.	பாடக் குறிப்பு	28
8.	உச்சரிப்புத் திருத்தம்	29
9.	உழைப்பே திறமை	30
10.	சிறு கதை	31
11.	அறிஞர் வாய்முத்துக்கள்	32
12.	விடுகவி விடைகள்	32
13.	கதவின் அவசியம்	33
14.	சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறிய வீர மொழிகள்	34
15.	மாணவர் கழகம்	36
16.	யோசனைக்கணக்கு விடைகள்	37
17.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	38
18.	பெற்றோர் சங்கம்	38
19.	சங்கீதம்	39

Rates of Advertisement

PERIOD	HALF PAGE Rs.	As.	Ps.	FULL PAGE Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 AUG 19
MADRAS

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து **34**] **15 ஆகஸ்டு 1943** [மலர் **2**

பத்திராதிபர் குறிப்புகள்

189979

நம் பாடசாலை தினக்கொண்டாட்டமும், கல்விக் கண்காட்சியும். (Our School Day Celebration and Our School Educational Exhibition) இவ்வைபவங்கள் இவ்வருஷம் அக்டோபர்-மீ 15, 16-ம் தேதிகளில் நடைபெறும். இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை கல்விக் கண்காட்சி நம் பாடசாலையில் நடத்திவருவது வழக்கம். அதுபோல் இவ்வருஷத்திலும் ஷெ **கண்காட்சி** அக்டோபர்-மீ 15-ம் தேதியன்று நடத்த ஏற்பாடுசெய்துள்ளோம். நம் பழைய மாணவர்கட்கும், புது மாணவர்கட்கும் அவரவர் திறமைகளை எடுத்துக் காட்டத்தக்கதோர் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நம் மாணவர்கள் அனைவரும் ஊக்கத்துடன் உழைத்து, காட்சிப்பொருட்களைத் தயாரித்து, கண்காட்சி முழு வெற்றியடையுமாறு உதவுவர் என முற்றிலும் நம்புகிறோம்.

ஷெ கண்காட்சிக்காகவும், பந்தய விளையாட்டுகளுக்காகவும் இன்னும் நம் மாணவர்களின் பற்பல திறமைகளுக்காகவும், பல விதப் **பரிசுகளை** வழங்குவதாக நம் பழைய மாணவர்கள் வாக்களித்துள்ளனர். அதன் முழு விவரங்களையும் கொத்து 33,

மலர் 10, 11; ஏப்பிரல்-மே "பூங்கொத்தின்" 219-222 பக்கங்களில் "பழைய மாணவர் சங்க ஆண்டுவிழா" என்ற தலைப்பினடியிற் தெளிவாய்க் காணலாம். எனினும் ஷை கண்காட்சியை உத்தேசித்துக் கீழ்வரும் சிலவற்றைமாத்திரம் ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

பழைய புதிய மாணவர்களில் சித்திரத்தில் முதன்மையாகத் தேர்ந்தவருக்கு ஒரு வெள்ளிக்கோப்பை (Silver Cup); இவ்வருஷம் பயின்றுவரும் மாணவர்களுள் சித்திரத்தில் முதன்மையாகத் தேர்ந்தவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கம் (Silver Medal); தமிழ் போதனு உபகரணங்கள் தயாரித்தவர்களில் முதன்மையாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கம்.

* * *

அடுத்த செப்டம்பர்-மீ 30-ம் தேதிக்குள், ஏழுக்குக் குறையாமல் அதிகமான "பூங்கொத்து" சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவருக்கு வெள்ளிப்பதக்கப் பரிசு உண்டு.

இவ்வருஷம் போதனுமுறை பயின்றுவரும் "ஸீனியர்," "ஜூனியர்" மாணவர்களுள் பாரதியாரைப்பற்றிய சிறந்த தமிழ்வியாசம் எழுதியவருக்கு பாரதியார் தினத்தன்று (11-9-'43) வெள்ளிப்பதக்கப் பரிசு அளிக்கப்படும்.

இன்னும் 1942–1943-ல் போதனுமுறை பயின்ற மாணவர்களுள் "சிறுகதைப் போட்டியில்" சிறந்து விளங்குபவருக்கு வெள்ளிக்கோப்பை (Silver Cup) ஒன்று பரிசாக அளிக்கப்படும்.

மேலும் ஷை பாடசாலைத் தினத்தன்று (16-8-'43) நடைபெறும் போட்டிப் பந்தயங்களுக்கும் நம் பழைய மாணவர்கள் வாக்குறுதி கூறியுள்ளபடி பரிசுகள் ஷை தினத்தில் வழங்கப்படும். ஆகவே, வாக்களித்தவர்களும், பரிசுபெற விரும்புகின்றவர்களும் ஷை வைபவங்களில் ஈடுபட்டு, அவற்றைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றனம்.

அணியியல்

(M. A. S. Udayar, Tamil Pandit)

வீறுகோளணி :—செல்வத்தினுயர் நிலையால் சிறியதோர் காரியத்திற்கு உயர்ந்த பெரும் பொருளையும் உபயோகிப்பதாகக் கூறுவதாகும்.

(உ-ம்) :—

"வீக்குர் சிறுபைந் துகிற்றேகை
    விரியுங் கலாப மருங்கசைப்ப
விளையாட் டயருமணற் சிற்றில்
    வீட்டுக் குடிபுக் கோட்டியிருள்
சீக்குஞ்சுடர் தூங்கமழன் மணியின்
    செந்தீமடுத்த சூட்டடுப்பிற்
செழுங்காற் பவளத்து வரடுக்கித்
    தெளிக்கு நறுந்தண் டேறலுலை
வாக்குங் குடக்கூன் குழிசியிலம்
    மதுவாற்றரித்த நிந்திலத்தின்
வல்சிபுகட்டி வடித்தெடுத்து
    வயன்மா மகளிர்குழாஞ் சிறுசோ
றுக்கும் பழனத்தமிழ் மதுரைக்
    கரசேதாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண்
    அமுதே தாலோ தாலேலோ."

எனவரும் குமரகுருபரவடிகளின் வாக்காகிய மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழினுள். மதுரையம்பதியைச் சார்ந்த கழனியுழுனர் இளஞ்சிறு பெண்மகளிரும் தங்கள் சிற்றில் விளையாட்டின்போது சிறு சோறமைத்தற்கு இரத்தினக் கற்களால் அமைக்கப்பெற்ற சூட்டடுப்பிற் பவளமாகிய விறகை அடுக்கி தெளிந்த நறுவிய தேனை உலைப்பெய்து அத்தேனால் நன்கு கழுவியமைக்கப்பெற்ற முத்துக்களாகிய அரிசியையிட்டுச் சிறு சோறட்டுவிளையாடுவர் என்ற முகத்தால் கிடைத்தற்கரிய இரத்தினம், பவளம், முத்து, தேன் முதலியவை அந்நாட்டு மள்ளச் சிறுராலும் விளையாட்டின்பொருட்டுக் கொள்ளப்படுகின்றனவென்று அந்நாட்டின் செல்வச் சிறப்பைக் கூறியமை அறிக.

தாயும் சேயும்

(வித்துவான், பொ. திருஞானசம்பந்தர்)

ஆன்றவிந்தடங்கிய சான்றோராகிய நம்முன்னோர், தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை, என்றும் ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்லை என்றும் கூறிப்போந்தனர். இங்ஙனம் தாய்மாரைக் கடவுளாயும், கடவுள் எழுந்தருளியுள்ள திருக்கோவிலாயும் அவர்கள் கூறிப்போந்ததன் காரணம், நம்மைப் பதின்திங்கள் சுமந்து பயந்தமைக்காக மட்டுமின்று; நம்மை நன்முறையில் வளர்த்து, இளமைக்காலந் தொட்டே நம்மன மாசுகளை அகற்றி, நாம் சான்றோனாதற்கு முதல் ஆசிரியராய் மிளிர்ந்து, நாம் தவறுசெய்யுங்கால் நம்மை அடித்தும், வைதும் உடனுக்குடன் திருத்தி நன்னிலையிற் செலுத்தும் கண்கண்ட தெய்வமாய் இருத்தல்பற்றியே அவர்கள் அங்ஙனம் கூறினரென்று உணர்தல் வேண்டும்.

இன்றைய உலக இயக்கத்திற்கு உயிர்நாடியாய் விளங்குபவர் நம் அருமைத் தாய்மார்களேயாவர். உலகின் உயர்வு தாழ்வுகள் நம் தாய்மார்கள் கையிலேயுளது. ஊக்கம் வேண்டும்; உழைப்பினால் வாரா உறுதிகளில்லை; தாய்மார்களை நன்னிலையில் ஊக்குதலும் வேண்டும். அவர்களாலேயே உலகு முன்னணியில் நிற்கும். எனின், அன்னார் கடமைகளோ மிகப்பலவாகும். அரசன் குடிகட்குச் செய்யுங் கடமையினும், குடிகள் அரசற்குச் செய்யுங் கடமையினும், கணவன் மனைவிக்குச் செய்யுங் கடமையினும், மனைவி கணவற்குச் செய்யுங் கடமையினும், நண்பர் நண்பர்க்கும், உற்றார் உறவினர்கட்கும் மாறிமாறிச் செய்யுங் கடமையினும் தாய் தான் பெற்ற பிள்ளைகட்குச் செய்யுங் கடமையே மிகப் பலவாம், சிறந்ததுமாம். ஏனெனில், உலகில் வாழும் எவரும் முடிவாக ஓர் தாயின் வயிற்றிற் பிறந்தே உயிர் நிலைக்கு வரவேண்டியிருத்தலின், தாய் நல்லறிவும், நல்லியல்பும், நற்குண நற்செய்கைகளும் உடையவளாயின் அவள் வயிற்றிற் பிறந்து அவளால் வளர்க்கப்பட்ட பிள்ளைகளும் நல்ல பிள்ளைகளாயிருக்கும்; தாய் தீயளாயின் அவளால் வளர்க்கப்பட்ட பிள்ளைகளும் தீயவர்களாகவே யிருப்பரென்பது திண்ணம். செழுமையும் கொழுமையும் கொண்டுள்ள உயர் நிலைத்திற்றோன்றிய பயிர்களையும், உரமில்லா உவர்மண்ணிலிட்ட பயிர்களையும் பாருங்கள்! புன்னிலத்திலிட்டு விளைத்த பயிர் வற்றி வறண்டு பயனின்றிக்கழிகின்றன. நன்னிலத்திலிட்ட பயிரோ பலர்க்கும் பயன்படுகின்றன. இங்ஙனமே நற்றாயரிடத்தும் ஏனைய தாயரிடத்தும் தோன்றும் பிள்ளைகளும் இருக்கும்.

இனி இத்துணைச் சிறந்த தாய்மார்கட்கு நல்லறிவு, நல்லியல்பு, முதலாய பெருங்குண நலங்கள் வருமாறுதானெப்படி எனில், கற்கப்

படும் நூல்களைக் கற்றலானும், கற்றூர் கூறுவனவற்றைக் கேட்டலானும், கற்றூரோடு பழகுதலானுமேயாம். விளக்குள்ள இடத்திலன்றே ஒளி உண்டாகும், மலருள்ள இடத்திலன்றே மணமுண்டாகும். அதுபோல்தான் கல்வியுடையாரிடத்தே நல்லறிவு முதலிய பெருங்குணங்கள் உண்டாகும் என்று உணர்தல்வேண்டும்.

இங்ஙனம் கற்பன கற்றும், கேட்டும், பழகியும் நல்லறிவைப் பெற்றுக்கொண்ட தாயே தன் பிள்ளைகளையும் குழந்தைப்பருவந் தொட்டே நன் முறையில் வளர்ப்பள். சேய்மைப் பருவத்தில் வளர்க்கப்படும் நன்முறைக்கேற்பவே அச்சேயும் தன் முதுமைப் பருவத்தில் மூதறிவுபெற்றுத்திகழும். இதற்கு "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழியே சான்றாகும். பெரியவர்களானபிறகும், நாம் பெருமைபெற்று உயர்தற்கு நம் சிறு வயதிற் கொண்ட பழக்கங்களே நமக்கு உறுதுணையாய் நிற்கும்.

இனி இச்சிறு வயதிற்கொண்ட கொள்ளும் பழக்கங்களோ வயது முதிர்ந்த தாய் தந்தையரையும், தன் மனைவி மக்களையும் பாதுகாத்தற்பொருட்டு வெளியே சென்று உழைக்கும் தன் தந்தையிடத்தினின்றும் வந்ததல்ல. ஏனெனில் வெளி வேலைகளில் ஈடுபட்டது போக எஞ்சிய சிற்சில நேரங்களிலேயே நம்மோடு பழக்கம்; பின் தன் உடன்பிறந்தாரிடத்தினின்று தோன்றியதோ எனின், உடன் பிறந்தார் சிறியராயின் அவர்பால் அடையும் பயன் சிலவே; பெரியராயின், கல்வி கற்றற்கோ, அன்றி தன் தந்தையர்க்கு உடன் உதவியாகவோ அவரும் வெளிச்சென்றுவிடுவர். நம் வீட்டிற்கு வரும் சுற்றத்தாரோ நம் வீட்டிலேயே நிலையாயிராதவர். பின் எவரிடமிருந்துதான் உண்டாகிறது என்றூல் நம் அருமை பெருமை வாய்ந்த அன்புள்ள தாயாராலேயே சிறு வயதிற் பழக்கங்கள் உண்டாகின்றன என்பது நன்கு விளங்கும்.

(தொடரும்)

மரண அறிக்கை

இப்பாடசாலையில் 1940–42-ம் வருஷங்களில் பயின்று வந்த ஸ்ரீ A. S. செபஸ்தியான் உபாத்தியாயர், (ஆனந்தூர்) பரலோக ப்ராப்தியான செய்தியைக் கேள்வியுற்று விசனிக்கிறேம். அவருடைய ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. அன்னவர் குடும்பத்திற்கு எமது அநுதாபத்தைத் தெரிவிக்கிறேம்.

பத்திராதிபர்

சரித்திர பாடத்தில் கால உணர்ச்சி

(Time Sense in History)

(P. G. S. Aiyar B.A., L.T.)

சரித்திரப்பாடம் போதிப்பதில் ஆசிரியர்கள் அதிகமாகத் தேதிகளைக் கொடுத்து மாணவரை அருவருப்புக்கொள்ளும்படி செய்கின்றனர் என்பது பல கல்வியாளர்களின் அபிப்பிராயமாகும். தேதிகள் அவசியமில்லையென்றும் கருதுகின்றனர் சிலர். முன்காலத்தில் சரித்திர போதனை இத்தகைய குற்றச்சாட்டிற்கு இடங்கொடுத்தது என்றுதான் சொல்லவேண்டும். அதிகமான தேதி விவரங்களைக் கொடுத்து சரித்திரத்தை ஒரு காலக்கிரமப்பட்டியலாகச் செய்தனர்; சரித்திரம் உயிரற்றதாய் விளங்கிற்று. இவ்விதம் அதிகமாகத் தேதிகளைக் கையாளுவதும் கெடுதல். தேதிகளை அறவே புறக்கணித்தலும் கூடாது; அவ்விதம் செய்யின் சரித்திரத்தினுல் ஏற்படக்கூடிய முக்ய பலன் கைகூடாது. மாணவர் கால உணர்ச்சியை அடையமாட்டார்கள்.

கால உணர்ச்சி ஏன் அவசியம், அதன் பொருள் யாதென்பதை இங்கு சுருக்கமாக ஆராய்வோம். ஒரு நிகழ்ச்சியையோ அல்லது சரித்திர பாத்திரத்தைப்பற்றியோ ஒரு தீர்மானமான முடிவுக்கு வருவதற்கு அந்த நிகழ்ச்சி அல்லது பாத்திரம் எக்காலத்தில் காணப்பட்டதென்ற அறிவு அவசியம். காலதேச வர்த்தமானங்களை மனதில் கொண்டுதான் உண்மையான முடிவுக்கு வரமுடியும். அவசரத்தில் ஒரு அபிப்ராயத்தைக் கொள்ளாமல், நிதானித்து தீர்மானிக்கும் மனப்பான்மை ஏற்படுதல் அவசியம். இதனையே கால உணர்ச்சி எனக் கூறலாம்.

சமூகத்தின் பழக்க வழக்கங்கள், சட்டங்கள், அனுஷ்டானங்கள் முதலியன நாளுக்குநாள் மாறுபட்டு வந்திருக்கின்றன. ஒருகாலத்தில் நியாயம் என்று கருதப்பட்ட காரியம் பிற்காலத்தில் முறையற்றதாய்ப் போயிருக்கும். ஆதலால் எந்த சரித்திர பாத்திரத்தையும் அவர்கள் வாழ்ந்த காலத்தின் அனுஷ்டானங்களைக்கொண்டே சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அவ்விதம் செய்வதற்கு அவர்கள் வாழ்ந்த காலம் அறிதல் அவசியமல்லவா? மேலும் அத்தகைய சரித்திரப் பிரசித்திபெற்றவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய அவகாசமிருந்ததா என்று கவனித்தல் முக்கியம். பாபர் நான்கு வருடங்கள்தான் ஆட்சி செய்தார். அவர் தாம் ஆட்சி செய்த காலத்திற்குள் அரும் பெரும் காரியங்களைச் சாதித்துள்ளார். அவரைப்பற்றிய அபிப்பிராயம் தெரிவிக்க இந்த ஆட்சி காலத்தின் வரையறை அவசியம்.

மேலும் ஒரு நிகழ்ச்சி தற்காலத்திலிருந்து எவ்வளவு காலத்திற்கு முன் நடந்தது, அக்காலத்தின் நாகரீகநிலை யாதென்பதையும் தெரிந்து

கொள்ளவேண்டும். தற்காலத்தில் காணப்படும் சாதனங்களும் வசதிகளும் முன்காலத்தவருக்குக் கிடையாது. ஒருவருடைய செய்கையை மதிப்பிடுவதற்குமுன் அவர் வாழ்ந்த காலத்தின் முன்னேற்றத்தை மனதில் கொள்வது அவசியமாகும்.

ஆகையால் சரியான கால உணர்ச்சி ஏற்படவேண்டுமானல் தேதிகள் மாத்திரமிருந்தால் போதாது. நிகழ்ச்சி வியாபித்திருந்த காலத்தின் அளவு தெரியவேண்டும். அந்நிகழ்ச்சி தற்காலத்திலிருந்து எவ்வளவு பிற்பட்டதென்பதும் தெரியவேண்டும். இம்மூன்று அம்சங்களையே ஆங்கிலத்தில் Location, Duration and Distance என்று கூறுகிறோம். இம்மூன்று அம்சங்களையும் பின்பற்றி கற்பித்தால்தான் சரியான கால உணர்ச்சி யேற்படும்.

யோசனைக் கணக்கு

(K. Srinivasan, Teacher, Bd. School, Idappadi.)

20 வாழைப்பழங்களும் 16 தேங்காய்களும் சேர்ந்து ரூ. 1-5-0 ஆனல், 16 வாழைப்பழங்களும் 20 தேங்காய்களும் சேர்ந்து ரூ. 1-8-0 விலையாகிறதென்றல் ஒரு வாழைப்பழம், ஒரு தேங்காய் என்ன விலை?

விடுகவிகள்

1. அடியடி தென்னஞ்சோலை; அதிலொரு பையன் காவல்; முத்தையா முதலியார் காவல். இப்படிக் காவலில் எப்படி வந்தாய் தம்பீ!

குசவனுங் கண்ணுறங்கி, குருவியும் கூட்டில் அடங்கி சாலக வாசலிலே சந்தோஷமாக வந்தேன். நான் யார்?

R. Muthukrishna Naidu.

2. ஒரே ஒரு மரம், மரத்தில் பன்னிரண்டு கிளை, கிளைக்கு முப்பது இலை. இலையில் பாதி வெள்ளை, பாதி கறுப்பு இது என்ன?

V. Rajagopalan, H. M. Naranamangalam.

3. மழை பெய்யாப் பச்சையும், வண்ணன் வெளுக்காத வெள்ளையும், கத்திபடாத இரத்தமும் என்ன இரத்தம்.

M. Savarimuthu.

4. ஆள் இறங்கமுடியாத கிணற்றில் மயில் இறங்குகிறது. இது என்ன?

S. Savarinathan.

பாடக்குறிப்பு

வகுப்பு : III. சுகாதாரம் (காலைக்கடன்கள்)

நோக்கம் : காலையில் எழுந்தவுடன் செய்யவேண்டிய முக்கியமான காரியங்களைப் போதித்தல்.

உபகரணம் : பல் விளக்கும் குச்சி, பற்பொடி, தேங்காய் எண்ணெய், சோப்பு, கண்ணாடி, சீப்பு.

பீடிகை : இரவில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எத்தனை மணிக்குப் படுக்கப்போகிறீர்கள்? எப்பொழுது படுக்கையைவிட்டு எழுகிறீர்கள்? என்பனபோன்ற கேள்விகள்மூலம் சிறிது நேரம் சம்பாஷிக்கவும், பிறகு நோக்கத்தைத் தெரிவிக்கவும்.

விஷயமும் முறையும் : ஓர் ஊரில் **மாதவ ராஜன்** என்ற பையன்—மூன்றும் வகுப்பு—கெட்டிக்காரன்—இரவில் 9 மணிக்குப் படுக்கப் போவான்—காலையில் சேவல் "கொக்கொக்கோ" என்று கூவும் பொழுது எழுவான்—வேறு என்ன பக்ஷி அதிகாலையில் எழுகிறது? (காகம்) சேவல், காகம் இவைகளைப்போல் சப்தம் செய்யுங்கள்—மாதவ ராஜன் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் கடவுளை நினைத்து அவரை வணங்குவான்—பின் படுக்கையை எடுத்து ஒழுங்காய் வைத்துவிட்டு வெளியில் போய் வருவான்—பிறகு பல் விளக்கி முகம், கை, கால் முதலியவற்றைச் சுத்தம் செய்துகொள்வான்—பின்பு பாடங்களைப் படிப்பான். காலை போஜனம் உண்பான். பாடசாலைக்குப் போவான்.

குறிப்பு : கதை ரூபமாய்ப் போதிக்கவேண்டும். மாதவ ராஜன் உபயோகிக்கும் சாமான்கள் பற்குச்சி (அல்லது) பற்பொடி, கண்ணாடி சீப்பு முதலியவற்றைப்பற்றி வர்ணிக்கவும். ஒவ்வொன்றையும் உபயோகிக்கும் விதத்தைப்பற்றிக் கூறவும். பிள்ளைகளது அனுபவங்களோடு "மாதவராஜனது" செய்கைகளை ஒப்பிடவும். பின்னர், ஒரு பையனை மாதவராஜனாக இருக்கச்செய்து விஷயத்தை நடிக்கும்படி செய்யலாம். சேவல், காகம் இவைகளைப்போல் பையன்கள் சப்தம் செய்யலாம். மாதவராஜன் பழக்கவழக்கங்களைப்பற்றி ஓர் பாடல் இயற்றி மாணவர்களைப் பாடச்செய்யலாம். கடைசியாக முகம், கண்கள், காதுகள், மூக்கு, பற்கள் முதலிய அங்கங்களைச் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றியும், கண்ணாடி, சீப்பு, சவர்க்காரம் அல்லது சீயக்காய்ப்பொடி முதலிய சாமான்களைப் பிள்ளைகள் ஒழுங்காய் வைத்துக்கொண்டு சரியாய் உபயோகித்து வரவேண்டும் என்பதைப் பற்றியும் வற்புறுத்தவும்.

உச்சரிப்புத் திருத்தம்

(K. Maria Antony)

ரகர, றகர, லகர, ளகர, ழகர, பேதங்களும் அவற்றைப் போதிக்கும் முறையும்

ஆரம்ப வகுப்புகளில் சில தமிழ் எழுத்துக்கள் சரியான உச்சரிப்புடன் கற்பிக்கப்படுவதில்லை. இதனால் மாணவர்கள் மேல் வகுப்பிற்கு வந்தபின்னரும் சில வல்லின, இடையின, மெல்லின எழுத்துக்களுக்குள்ள பேதம் தெரியாமல் இருக்கின்றனர். இது மிகவும் விசனிக்கத்தக்கதே. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பதற்கொப்ப, பாலர் வகுப்புகளிலுள்ள மாணவர்களுக்கு எழுத்துக்களின் சுத்தமான உச்சரிப்பைக் கற்றுக்கொடுத்தல் அவசியம். ஏனெனில் பின்னர் அக்குறையை நிவர்த்திப்பது அசாத்தியம்.

சில எழுத்துக்களைச் சிறுவர்கள் ஒரேவிதமாகவே உச்சரிக்க நேரிடுகிறது. இதனால் பொருளும் மாறுபட்டு பாஷையும் சீர்குலைந்து போக ஏதுவாகின்றது. இதற்குப் பரிகாரமாகப் பின்வரும் முறைகளைக் கையாளுவது நலம்.

ஆற்றின் இருபுறம் கரை ஆடையில் அழுக்கு கறை	குறைந்த ஒலி. அழுத்தமான ஒலி.
ஆடுகள் உண்பது தழை உடலில் முக்கியம் தலை	நாவின் வளைவு அதிகம். நாவின் வளைவு கொஞ்சம்.
நண்டுகள் வசிப்பது வளையில் மீன்கள் பிடிப்பது வலையில்	நாவின் வளைவு மத்திபம். நாவின் வளைவு கொஞ்சம்.

இவைபோன்ற பல வாக்கியங்களை அட்டைகளில் தெளிவாக எழுதி, வல்லின இடையின எழுத்துக்களைப் பலவித வர்ணங்களால் குறிப்பிட வேண்டும். எழுத்துக்களின் ஓசை மாறுவதைக் கவனிக்கச்செய்தல் வேண்டும். உச்சரிப்பின் அற்ப வித்தியாசத்தால் ஒரே வார்த்தை வேறொரு முழு வித்தியாசமான அர்த்தத்தை உணர்த்தும் என்பதை மேற்கண்டதுபோன்ற உதாரணங்களால் விளங்கவைக்கவேண்டும்.

நாவின் வளைவுக்குத் தகுந்தபடி ல, ள, ழ என்பவை ஒலிப்பதையும் கவனிக்கச் செய்தல் அவசியம்.

அரிவாள் அறிவாள் : மழையில் வந்தான் மலையில் வந்தான்; காளையில் வருகிறான் காலையில் வருகிறான். இவைபோன்ற வார்த்தைகளைக் கரும்பலகையில் எழுதிக் கற்பித்தல்வேண்டும். வித்தியாசமான ர, ற, ல, ள, ழ இவைகள் வரக்கூடிய வார்த்தைகளைப் பாட புஸ்தகத்திலிருந்து எடுத்து எழுதிவரச்செய்யவேண்டும். மின்னட்டைகள்

மூலமும் கற்பிக்கலாம். தப்பாக எழுதி அந்த குறிப்பிட்ட இடத்தில் சரியான இவ்வெழுத்துகளை எழுதும்படி அப்பியாசம் கொடுப்பது நலம். நன்ருய் உச்சரித்து வாசித்ததைப் பிழையின்றி எழுதவும் கற்றுக் கொடுத்தல் வேண்டும். இம்முறைகளைக் கையாடிஞல், மாணவர்கள் தமிழில் அதிக எழுத்துப்பிழைகள் செய்யமாட்டார்கள் என்பது உறுதி.

"உழைப்பே திறமை"

(உழைப்பின் மகிமையையோட்டிய சில பழமொழிகள்)

(R. Santiagu, Malayadipatti)

1. உழைப்பு ஊக்கமும் ஆக்கமும் தரும்.
2. உழைத்து உண்ணுவோன் உயர்ந்தோஞவான்.
3. தோட்டிபோல் உழைத்து துரைபோல் சாப்பிடு.
4. கக்கப் பாடுபடு ; விக்கச் சாப்பிடு.
5. உழைப்பாளிகளுக்கு இன்பம் உலகம்.
6. முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.
7. சால உழைத்துச் சடுதியில் பணம் தேடு.

குந்தித்தின்ருல் குன்றும் மாளும் என்றபடி நமக்கு மலையத்தனை செல்வம் இருந்தபோதிலும் அச்செல்வம் குறை யாதிருக்கும்வண்ணம், உலகில் பிறந்த நாம் பணக்காரன் ஏழை என்ற ஒவ்வொரு மனிதனும் தன் சரீரத்திலுள்ள வேர்வையானது கசிந்து தரையில் விழும்வண்ணம் (அதாவது நெற்றிவேர்வை நிலத்தில் விழ) உழைத்து உண்ணவேண்டும். இதஞல்தான் "உழைத்து உண்ணுவோன் உயர்ந்தோஞவான்" என்று கூறப்பட்டிருக்கிறது.

8. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோன், வீணில் உண்டு களித்திருப்போனை நிந்தனை செய்வான்.
9. உழைப்பு இல்லையேல் ஊதியமில்லை.
10. வானத்திருந் தொன்றும் வாராதிங்குன்னிடத்தே தாஞக இஃதுண்மை தம்பி கேள்—ஆனதால் யோகமதை நயபாதே யோசனை யால் செய் முயற்சி ஏக மனதோடு செய்வாய் ஈங்கு.

சிறு கதை

R. Muthukrishna Naidu, H. M., Kottamedu.

ஒரு குடியானவன் சந்தைக்குப் போனான். பானை வாங்கினான். வீடு திரும்புகையில் ஒரு ஆலமரத்தினடியில் சற்று தங்கினான். அங்கு ஒரு வளையில் ஒரு நரியைக் கண்டான். நரியைப் பிடிக்க எண்ணினான். கையில் வலை இல்லை. நரி ஓடிப்போகாமலிருக்கப் பானையை வளையின் பக்கத்தில் வைத்தான். வலை கொண்டுவர வீட்டுக்கு ஓடினான். பானை காற்று வாட்டமாய் இருந்தது. அதனால் 'பூம், பூம்' என்று சப்தம் உண்டாயிற்று. நரிக்குப் பயம் உண்டாயிற்று. வெளியே எட்டிப் பார்த்தது. பானை என்று தெரிந்துகொண்டது.

"ஏ, பானையே, நீயா என்னை பயமுறுத்தினாய்? இதோ பார் உன்னை அடித்துக் கொன்றுவிடுகிறேன்" என்று ஒரே பாய்ச்சலாக அதன்மேல் பாய்ந்தது. தலை பானைக்குள் நுழைந்துகொண்டது. தலையை எடுக்க முடியவில்லை. பலவிதமான தந்திரங்கள் செய்தும் பானைக்குள் நுழைந்த தலையை வெளியே எடுக்க முடியவில்லை. "ஏ! பானையே! நான் தெரியாமற் செய்துவிட்டேன். என்னை விட்டுவிடு" என்று கெஞ்சிற்று. பானை பதிலுரைக்கவில்லை.

பானை என்னைக் கொல்லப்பார்க்கிறது, அதற்குள் அதை நான் கொன்றுவிடவேண்டும் எனத் தீர்மானித்து ஒரு குளத்திற்குச் சென்றது. குளத்தில் கொண்டுபோய் பானையை அமுக்கிற்று. பானை மூழ்கவில்லை. அமுக்க அமுக்க பானை நரியையும் சேர்த்துத் தள்ளிற்று.

ஓஹோ, பானைக்கு நம்மைவிட அதிக பலம் போலும்! நம்மால் அதைக்கொல்லமுடியாதுபோலிருக்கிறது, என்று நினைத்துக் கரைக்கு வந்து பானையைப் பார்த்துக் கெஞ்சிற்று. பதில் இல்லை. மேலும் கெஞ்சிற்று. பானை அதை விட்டபாடில்லை.

"சரி, இன்று செத்தோம்," என நரி சொல்லிக்கொண்டே போயிற்று. அதற்குக் கண் தெரியவில்லை. தாறுமாறாய்ப் போய்க் கொண்டிருக்கையில் ஒரு மரத்தில் போய் மோதிக்கொண்டது. பானை உடைந்தது. நரிக்குச் சந்தோஷம். "ஏ, பானையே, இவ்வளவுதானா உன் சமர்த்து? அப்போதே என்னை விட்டிருந்தால் இந்த ஆபத்து உனக்கு உண்டாயிருக்காது அல்லவா? என்று சொல்லிக்கொண்டே போயிற்று.

குடியானவன் வலையைக் கொண்டுவந்து பார்த்தான். நரியைக் காணவில்லை. பானையையும் கண்டிலன். குடியானவன் ஏமார்ந்தான்.

அறிஞர் வாய்முத்துக்கள்

(N. R. திருவேங்கடம்)

1. வறுமையைப் பொறுமையோடு சகிப்பவனும், பிறர் தவறை அன்போடு மன்னிப்போனும் பெருந்தகையாளராவர். (மகம்மது.)

2. ஒருவன் பின்பற்றுபவையே (மனிதர், பொருள், கருவிகள்) அவனை மதிப்பிடற்குரியன. (மார்க்கஸ் அரீலியஸ்.)

3. அதிகம் கற்றுவிட்டோம் என இறுமாந்திருப்பான் அறிஞன்; ஒன்றும் கற்கவில்லையே என ஏங்கி நிற்பான் ஞானி. (கூப்பர்.)

4. தன் தலைவனுக்குப் பொல்லாங்கு நினைக்கும் எவனும் சுதந்திர புருஷனாகான். (சாக்ரடீஸ்.)

5. நம்முடைய சிரத்தை (cares) முழுதும் நம்முடைய உரிமைகளை நோக்குவதில்தான்; நமக்குக் கிடைக்கும் ஆசிகளை கைநெகிழ விட்டுப் பின் அறியாமையால் அவைகளை சாபம் என கூசாது கூறுகிறோம். (ஜார்ஜ் இலியட்.)

6. எல்லா ஐஸ்வரியமும் உடையவன் நிறையப் பணமுடையவனன்று; அவைகளை விரும்பாதவனே. (கிரைசாஸ்டம்.)

7. தன் சகபாடிகளை அன்புடன் நேசிப்பவனே உண்மையில் கடவுளைப் புனித முறையில் நேசிப்பவனாவான். (ஆலிஸ் கேரி.)

8. உண்மைக் கொடையின் சிகரமெனப்படுவது கொடையளியாதவர்க்குக் கொடை அளித்தலே. (லாங்பெலோ.)

9. கடவுளைக் கைவிட்டவரும் இல்லை; கடவுளை நம்பி கைவிடப் பட்டவரும் இல்லை. (அகஸ்டின்.)

10. நம் செயல்கள் பிறரால் பேசப்படும்போது போற்றப்படுகின்றன. நாமே நம் செயலைப் பேசப்புகுங்கால் பலராலும் நம் செயல்கள் தூற்றப்படுகின்றன. (பிளினி.)

11. ஒரு செயலுக்காக அளிக்கப்படும் வெகுமதியானது அச் செயலுக்காகவன்று; அடுத்த செயலை முழு சக்தியோடு செய்யத் தூண்டும்பொருட்டே. (ஜார்ஜ் இலியட்.)

12. ஒழுக்கம் நடத்தை தோற்றம் இவைகளின் உன்னத நிலை எளிய (simple) மனப்பான்மையோடிருத்தலே. (லாங்பெலோ.)

விடுகவி விடைகள்

(கொத்து 34, மலர் 1, பக்கம் 16.)

விடைகள்:—1. தேங்காய் (உடைத்தது). 2. திண்ணை. 3. பூரான் அல்லது நண்டு.

[மூன்று விடைகளையும் சேர்த்துக் கொடுக்காத காரணம்பற்றி குறை விடையளித்தவர்கள் பெயர் பிரசுரிக்கவில்லை. பத்திராதிபர்.]

கதவின் அவசியம்

(T. Savari Rajan)

பண்டைக் காலத்தில் வீடுகளுக்குக் கதவுகள் அமைத்தல் வழக்கமில்லாதிருந்தது. திறந்த வாசல்களும், திறந்த ஜன்னல்களும்தான் உண்டு. மக்களுக்கு இவைகளின் பெயரும், உபயோகமும் தெரியாது. தங்களை எதிர்த்துவரும் கொடிய விலங்குகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, நெடுந்தூரம் ஓடி, ஒருமுகமாய் வளைவாகத் திரும்பி, அவைகள் அறியாவண்ணம் தங்கள் குடிசைகளின் வாயில் வழியாகவோ, ஜன்னல் திறப்பு வழியாகவோ உள்ளே புகுந்து ஒளிந்துகொள்வார்கள். தங்களைக் காத்துக்கொள்ள இத்தகைய ஏற்பாடு உபயோகமாயிருந்தது.

நாளடைவில் நாகரீக மேன்பாட்டால் ஆயுதங்களை உபயோகிக்கத் தெரிந்துகொண்டதும், விலங்குகளைவிட மக்களே தங்களுக்குள் சண்டை சச்சரவு செய்துகொண்டு, ஒருவர் ஒருவரைப் பழிவாங்கத் தொடங்கினர். மிருகங்களை ஏமாற்றியதைப்போல், மனிதன் மனிதனை ஏமாற்ற முடியவில்லை. விரோதியின் கூடவே ஓடி, அவன் நுழைந்த வழியே பகைவனும் நுழைந்து தீங்குச்செய்தான். இச்சமயத்தில்தான் வாசல்களையும் ஜன்னல்களையும் இன்னும் மற்றுமுள்ள திறந்த வெளிகளையும் சமயத்துக்கு ஏற்றவாறு மூடவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதற்காகக் கற்பாறைத் துண்டுகளையும், பெரிய மரக் கட்டைகளையும் உபயோகித்தார்கள். இத்தகைய தற்காலிகமான அடைப்புகள் நாளடைவில் அபிவிர்த்தியாகி, தற்கால ஸ்பிரிங்கதவுகளாயும், மின்சாரத்துடன் இணைக்கப்பட்ட கதவுகளாயும் இருக்கின்றன.

இத்தகைய கதவுகளின் அவசியத்தைப்பற்றி அதிகமாய் எடுத்துரைக்க வேண்டியதில்லை. ஒரு வீட்டின் விஷயமனைத்தும் வெட்ட வெளிச்சமாய்த் தெரியாமலிருக்க இவை பெரிதும் உபயோகமாய் இருக்கின்றன.

மண் சுவரினாலாகிய வீட்டிற்குக் கதவுகள் அவசியமாய் இருப்பதைப்போல், தசை நரம்புகளாலும், இரத்தத்தாலும், சதையாலுமாகிய மனித சரீரத்திற்கும் கதவுகள் அவசியம். இக்கதவுகள் சரியாய் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படாவிட்டால் மனிதன் நல் வாழ்வு நடாத்தி இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் நல்ல இடம் அடைய முடியாது.

திருட்டு முதலிய கெட்டபேச்சுகளும், துர் ஆலோசனைகளும் உள்ளே வந்து புகாதபடி உன் காதுகளின் கதவுகளை சரியாய் மூடி வைக்கவேண்டும். இவ்விதம் செய்வதில் கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்தால் பின்பு அவைகள் வெளியே போகாமல் இன்னும் தன் தோழர்களையும் அநேகமாய் உள்ளே அழைத்துக்கொள்ளும்.

உன் கண்களின் கதவுகளைப்பற்றியும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். கெட்ட விஷயங்கள், வீண் கதைகள் கொண்ட புஸ்தகங்களையும், ஆபாசங்கள் நிறைந்த காட்சிகளையும் பார்க்காதே. அவைகள் உன் கண்ணின் பார்வையைக் கெடுப்பதுடன் அறிவை மந்தப்படுத்தி, அவசியமான பாடத்தில் கவனத்தைக் குறைத்து உன்னை நிர்மூடனாக்கிவிடும். கடைவீதிகளில் காணப்படும் நூதனப் பொருள்களின்மேல் செல்லும் உன் கண்களுக்கு மூடிபோடு. இல்லையெனின் கண்டவைகளை எல்லாம் வாங்கச்சொல்லி கடைசியாய்ப் பிச்சைக்காரனாக்கிவிடும்.

உன் உதடுகளின் கதவையும் சரியாய் மூடிவிடு. ஏனெனில் ஊரில் நடக்கும் கட்சி, பிரதிக் கட்சி வம்புகளுக்கும், கலாட்டாக்களுக்கும் உன் உதடுகள்தான் காரணம். சிறிது கவனக் குறைவால் சொல்லும் ஒரு சில வார்த்தைகளால் தனக்குத்தானே விளையும் கேடும், பிறருக்கு நேரிடும் இக்கட்டுகளும் கோடி கோடியாகும். உதடுகளின் கதவு சரியாய்ப் பொருத்தப்பட்டு இருந்தால் இத்தனை நியாயஸ்தலங்களும், சிறைக்கூடங்களும் தேவையில்லை. எவ்விஷயத்திலும் சமயசந்தர்ப்பமான மௌன விரதம் சிறந்தது.

மேலேகூறிய அனைத்தையும் செவ்வனே காப்பாற்றலாம். ஆனால் மனிதனின் தேகத்தினுள்ளே இருக்கும் மனத்திற்கு கதவு போடுதல் கடினமான காரியம். துர் ஆசை முதலியன உள்ளே புகாதபடி காக்கவேண்டும். ஆனால் வாயில் காப்பாளனாய் உள்ளது மனச்சாட்சி. இது விஷயத்தின் கனகனத்தைத் தெரிந்து அறிவிக்கும். பலதடவை மனச்சாட்சி சொற்படி நடக்காவிடில் அது நம்மேல் கோபப்பட்டுத் தன் வேலையைச் சரியாய் செய்யாது. மனதின் கதவு திறந்து இருக்க, திறந்தவீட்டில் நாய் நுழைந்தாற்போல், துர் ஆசைகளும், கெட்ட எண்ணங்களும் ஒன்றின்பின் ஒன்றாய் நுழைந்து உன்னை வருத்தும். அச்சமயத்தில் நீ மிகவும் வருந்துவாய்.

புத்தியுள்ளவன் அறியக்கடவன்; கண்ணுள்ளவன் பார்க்கக்கடவன்; காதுள்ளவன் கேட்கக்கடவன்.

சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறிய வீரமொழிகள்

சேனைத் தலைவர்காள்! சிறந்த மந்திரிகாள்!
யானைத் தலைவரும் அருந்திறல் வீரர்காள்!
யாவிரும் வாழிய! யாவரும் வாழிய!
தேவிநுந் தமக்கெலாம் திருவருள் புரிக.

மொக்குள்தாள் தோன்றி முடிவதுபோல்
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்!
தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வோ?
மானமொன்றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற்றிருக்க எவன்கொலோ விரும்புவன்?
தாய் பிறன் கைபடச் சகிப்பவனாகி
நாயென வாழ்வோன் நமரிலிங்குளனோ?
பிச்சைவாழ் வுகந்து பிறருடையாட்சியில்
அச்சமுற்றிருப்போன் ஆரியனல்லன்;
சோதரர் தம்மைத் துரோகிக ளழிப்ப
மாதரர் நலத்தின் மகிழ்பவன் மகிழ்க!
நாடெலாம் பிறர்வசம் நண்ணுதல் நினையான்
வீடுசென்றொளிக்க விரும்புவோன் விரும்புக!
ஆணுருக்கொண்ட பெண்களு மலிகளும்
வீணிலிங் கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்.
ஆரியரிருமின்! ஆண்களிங்கிருமின்!
வீரியமிகுந்த மேன்மையோரிருமின்!
மானமே பெரிதென மதிப்பவ ரிருமின்!
ஈனமே பொறுத வியல்பினரிருமின்!
தாய்நாட்டன்புறு தனையரிங்கிருமின்!
மாய் நாட் பெருமையின் மாய்பவரிருமின்!
தேவிதாள் பணியுந் தீரரிங் கிருமின்!
பரவியர் குருதியைப் பருகுவரிருமின்
மாற்றலர் கொடுமையை மறக்கப்பெறுமோ
செற்றினி மிலேச்சரைத் தீர்த்திட வம்மின்
வாளுடை முனையினும், வயந்திகழ் சூழினும்,
ஆளுடைக் கால்க ளடியினுந் தேர்களின்
உருளையி னிடையினும், மாற்றலர் தலைகள்
உருளையிற்கண்டு நெஞ்சு விப்புற வம்மின்
நம் மிதம் பெருவளம் நலிந்திட விரும்பும்
வேரறத் தொலைத்தபின் அன்றே மேம்படும்
ஆணெனப் பெறுவோம்! அன்றி நாமிறப்பினும்
வானுறு தேவர் மணியுல கடைவோம்
வாழ்வமேற் பாரத வான் புகழ்த் தேவியை
தாழ்வினின் றுயர்த்திய தடம் புகழ் பெறுவோம்.

189979.
600 008

"மாணவர் கழகம்"

(வி. மரியநாயகம்)

நம் மாகாணத்தில் சில பாடசாலைகளில் "மாணவர் கழகங்கள்" தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள் ஆசிரியர் மேற்பார்வையிலேயே நடத்தப்படல்வேண்டும். ஆரம்பத்தில் தம் தம் பாடசாலை ஆசிரியர்களே தலைமைதாங்கவேண்டும். கழகத்தின் நிகழ்ச்சிகளை ஆசிரியர் வகுத்து, மாணவர்களையும் பயிற்றுவிப்பார். தகுந்த தேர்ச்சியை மாணவர்கள் அடைந்தபின்பு ஊரிலுள்ள பல அறிவாளிகளை அழைக்கலாம். கழகத்தில் மாணவர்கள் சொற்பொழிவு, வியாஸம் வாசித்தல், செய்யுள்களை ஒப்புவித்தல், சிறு கதைகளைச் சொல்லல், சிறு நாடகங்களை நடித்தல், விகடமாகப் பேசுதல், பாடுதல், பல வேஷங்களைப் போட்டுக்காட்டுதல் (Fancy Dress) மாஜிக் (Magic) செய்தல் முதலிய பகுதிகளைத் தம்தம் திறமைக்கேற்ப ஆசிரியர்களின் உதவியுடன் செய்துகாட்டல் வேண்டும். மாணவிகள் இருப்பின் அவர்களும் இதில் கலந்து கும்மி, கோலாட்டம், பாட்டு, இசைக் கருவிகளை மீட்டல் முதலிய நிகழ்ச்சிகளைச் செய்துகாட்டல் வேண்டும். இதனால் பாடசாலையில் மாணவர் கழகங்களினால் விளையும் நன்மைகள் அனந்தம்.

முதலில் தலைமை தாங்குவோரின் அரிய உரைகளைக் கேட்க சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மாணவர்களின் திறன்களைப் போற்றுவதால் அவர்களை அதில் உற்சாகமூட்ட நல்ல வாய்ப்பு கிடைக்கின்றது. மாணவர்கள் செய்யும் குறைகளைத் தலைமை தாங்குவோர் சொல்வதால் சீர்திருத்தம் பெற வழி ஏற்படுகின்றது. மாணவர்கட்கு பிற்கால வாழ்வில் சபைகளில் அச்சமின்றித் தம் மனதில் தோன்றும் கருத்துக்களை வெளியிட பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மாணவனிடமும் இயற்கையில் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளியில் கொண்டுவர தூண்டுதல் கிட்டுகின்றது. ஓர் நிர்வாகத்தைச் செவ்வனே நடத்தப் போதிய ஞானம் சிறு வயதிலேயே உண்டாகின்றது. தம் பாடங்களின் சம்பந்தமான அறிவும் விர்த்தியாகின்றது. சிற்சில சமயங்களில் பெற்றோர்களும் இக்கழக நிகழ்ச்சிகளைப் பார்க்க வருவதால் அவர்கட்கும் தம் குழந்தைகளின் ஆடல், பாடல், நடிப்பு இவைகளைக் கண்டு ஆனந்தம் பெருகுகின்றது. பாடசாலையின் உயர்ந்த நோக்கம் யாது என்பதும் பெற்றோர்களின் மனதில் பதிந்துவிடுகின்றது. இதனால் ஆசிரியர்கட்கு மதிப்பும், உயர்வும், மக்கள் மடமை நீங்க வழியும் உதயமாகின்றது. மாணவர்கட்குத் தாங்களாக ஒன்று செய்வதென்றால் மிகவும் விருப்பம். மாணவர்கள் பேசும் அல்லது நடிக்கும் கட்டங்கள் நன்றாக இருக்கும்போது கைத்தட்டலால் ஏனைய மாணவர்கள் தங்கள் உற்சாகத்தை வெளியிடுவார்கள். இதனால் நடிக்கும் அல்லது பேசும் மாணவன் மேலும் தன் திறன்களைக் காட்ட ஆசைகொள்வது இயற்கை. இதைப் பார்த்த மற்ற மாணவர்களும்

தாமும் பிறர் போற்றும்படி நடிக்க, அல்லது பேச ஆவலால் தூண்டப்பெற்று மறு வாரம் நடக்கவிருக்கும் கழகத்திற்குத் தங்களையும் தகுதிப்படுத்த பற்பல வழிகளில் முயற்சிக்கிறார்கள். இவ்வித முயற்சி ஆசிரியர் கட்டாயத்தால் வராமல் இயற்கையிலேயே உதயமாவதால் அம்மாணவர்கள் தம்தம் முயற்சியில் வெற்றியையும் பெறுவர்.

ஆசிரியர்கள் தம்தம் பாடசாலைகளில் கழகங்கள் இருந்தால் அதை தகுந்த வழிகளில் நடத்தவேண்டும். கழகங்கள் இல்லாத பாடசாலைகளில் அவ்வகைகளைத் தோற்றுவிக்கவேண்டும். ஊரில் தொத்துநோய் நடப்பதாக வைத்துக்கொள்வோம். நாம் என்னதான் பிரசங்கம் செய்தாலும் மக்கள் அதைக் கேட்டு சீர்திருந்த வெகுகாலமாகின்றது. சுகாதார முறைகளைச் சிறப்பித்துக்காட்டும் ஓர் சிறு நாடகத்தை நடித்துக் காட்டுவோமானால் மக்கள் சீக்கிரமாக சீர்திருந்துகிறார்கள். அம்மை குத்துபவர்களைக் கண்டால் கிராமத்தார் தம் குழந்தைகளை மறைத்துவைக்கின்றனர். அம்மை குத்திக் கொண்ட குழந்தை அம்மை வார்த்தும் பிழைத்துக்கொண்டதாயும், அம்மை குத்தாத குழந்தை மரணமடைந்ததாகவும் ஓர் நாடகத்தை சிருஷ்டித்து நடித்துக்காட்டுங்கள். பிறகு பாருங்கள் அதன் பலாபலம் தெரியும். தாங்களே வலிய தம் குழந்தைகளுக்கு அம்மை வைக்க கொண்டு வருவார்கள். இப்படியே கிராம சீர்திருத்தங்களை நடப்பிக்கவும் மாணவர் கழகங்கள் பயன்படுகின்றன. ஆசிரியர்கள் பாடவும், நடிக்கவும், இசைக்கருவிகளைக் கையாடவும் அறிந்திருப்பாராயின் அவரே உன்னத ஆசிரியருமாகிவிடலாம். "மாணவர் கழகங்கள்" எங்கும் தோன்றவேண்டும். மாணவர்களும், பெற்றோர்களும் நன்மைபெறவேண்டும். ஆசிரியர்களின் நிலை உயரவேண்டும். ஆசிரியர்கள் கண்காணும் தெய்வங்களாக மதிக்கப்படல்வேண்டும்.

யோசனைக்கணக்கு விடைகள்

(கொத்து 34, மலர் 1, பக்கம் 16)

விடைகள் :—[குறிப்பு] பல விடைகள் தரலாகும்; அவற்றுள் சில பின் வருவன. பத்திராதிபர்.

33 × 3; 24 × 12; 33 × 21; 310 × 31 etc.

விடையளித்தவர்கள் :—K. Srinivasan, Idappadi; M. A. Susai, Mullipadi; U. S. Rayappan; S. R. Angannan, Sulur. S. Arpudasamy, Puthur; R. Ignatius Jeganathan; Arulsusaignanam; A. S. Dharmanathan, Pupil, VI Std. R. C. Model School.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

சென்றமாதம், 12, 13-ம் தேதிகளில் திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) அவர்களால் நம் பாடசாலையின் வருட சோதனை (Our School Annual Inspection) நடத்தப்பட்டது.

நம் பாடசாலைச் சாரணர்கள், இளஞ்சாரணர்கள் கூட்டம் அடிக்கடி கூடி வழக்கம்போல் நம் சாரணர்கள் தங்கள் இயக்க வேலைகள் புரிந்துவருகின்றனர். புது மாணவர்களிற் சிலர் ஷை குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

நம் பாடசாலை ரேடியோ : கல்வி நிகழ்ச்சிகளும், மற்றும் தேவையான நிகழ்ச்சிகளும், நம் மாணவர்களின் முன்னேற்றத்துக்கான விஷயங்களும் நம் **ரேடியோ** மூலம் பலதடவை ஒலி பரப்பப்படுகிறது. மாணவர்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியோடும் போர்டிங்கில் இருப்பதற்கு **ரேடியோ** எவ்வளவு பயன்படுகிறதென்பதைக் கூறவும் வேண்டுமோ!

20-7-43 இன்று திருச்சி, யுத்தக் கமிட்டியின் ஆதரவின்கீழ் நடைபெற்ற **யுத்தக் கண்காட்சியைப்** புத்தூர் மைதானத்திற் காண, நம் மாணவர் சென்றனர். அங்கு யுத்த முயற்சிக்கான பற்பல யுத்த சாதனங்களைக் கண்டு மகிழ்ந்து திரும்பினர்.

23-7-43. இன்று தஞ்சை அரசாங்க போதனாமுறைக் கலாசாலையினின்று சுமார் 60 மாணவர்களும்;

24-7-43. கும்பகோணம் Little Flower High School மாணவர்களில் சுமார் 75 பேரும் நம் போதனாமுறைப் பாடசாலையை முதலில் பார்வையிட்டனர். இங்குள்ள பற்பல வகுப்புகளில் வேலை நடக்கும் விதத்தையும் பாடசாலை நிர்வாக முறைகளையும் பார்த்து மகிழ்ந்து சென்றனர்.

பெற்றோர் சங்கம்

(ஆண்டுவிழா)

16-5-43-ல் குளித்தலை தாலூகா நாடாக்கப்பட்டி ஸரஸ்வதி எயிடெட் எலிமெண்டரி பாடசாலையின் ஆறுவது ஆண்டுவிழா ஷை ரேஞ்சு இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. K. வீரராகவ ஐயர் M.A., L.T. அவர்கள் தலைமையின்கீழ் வெகு சிறப்பாய் நடைபெற்றது. மாணவிகளால் கும்மி கோலாட்டங்களும், மாணவர்களால், சிவாஜி ராமதாஸ் நாடகம், ஸர்க்கஸ் விளையாட்டுகளும் இனிது நடைபெற்றன. போசிரியர்களால் பேருரைகள் நிகழ்த்தப்பட்டன. தலைவர் அவர்களது முடிவுரைக்குப்பின்னர் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டன. மங்கள வாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

A. Ramaswamy Aiyangar.

சங்கீதம்

ஆலமரமும் நாணற் புல்லும்

(B. Thomas Victor, Music Teacher, R. C. T. S., Trichy.)

29-வது மே. க. இராகம் சங்கராபரணம், ஆதி—தாளம்

ஸ ரி க ம ப த நி ஸ
ஸ் நி த ப ம க ரி ஸ

ப ப ம த ப ம கா , , ஸ ரி	க க ரி ம க ரி	ஸா , ; ,
ஆற்றங்க ரையோ ரத்தில் . . ஒரு	ஆலமரம் உயர்	வாய் . . .
ஸ க ரி ஸ நி ஸ ரீ , , ரி க	ம க ரி ப க ரி	ஸா , ; ,
ஊற்றுப்பெ ருக்கிடை யில். .மிக	ஓங்கிவ ளர்ந்தது	பார் . . .

2\. தற்பெருமை கொண்டந்த—பெரும்
ஆலமரம் தன்னையே
போற்றி புகழ்ந்துகொள்ள—சிறு
நாணலை நோக்கிடவே

ஆலமரம்

3\. அற்ப நாணல்செடியே—மிக
சொற்பக் காற்றடித்தாலும்
சற்றே வளைந்திடுமுன்—பல
மற்றே ஒடிந்திடுவாய்

நாணல்

4\. பூவில் பலமிகுந்த—பெரும்
ஆலமரமே நீகேள்
தேவன் எனக்குத்தந்த—பலம்
சொற்பம்தான் என்செய்குவேன்

ஆலமரம்

5\. நாணல் சிறுசெடியே—உன்னால்
மக்கட்கென்ன பயன்சொல்
நானோ பெரும்படைக்கும்—மிக
நல்ல நிழலாவேன்

நாணல்

6\. நானோ சிறுசெடிதான்—என்னை
தீண்டுவார் யாருமில்லை
வீணில் பெருமைகொள்ள—எனக்
கொன்றும் சிறப்பில்லையே

7\. ஆற்றில் பெருக்கெடுக்க—புயல்
காற்றுமடித்திடவே
சேற்றினில் ஆலமரம்—தலை
சாய்ந்து விழுந்ததுபார்

OFFICE OF THE REGISTRAR OF B
19
18 AUG 1943
MADRAS

8. தாழ்மைகொண்ட நாணலோ—மிக
தலைவணங்கிவிடவே
எழுந்து நின்றதுபார்—புயல்
யாவுமுடிந்தவுடன்

9. கற்றறியும் பாலர்காள்—நீவிர்
கேளுமிக்கதையால்
தற்பெருமை கொள்பவர்—தலை
கவிழ்ந்து வெட்கிடுவார்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

189979

விகடம்

பி. ஏ. வகுப்பில் படிக்கும் ஒரு அத்தானைப் பார்க்க ஒரு பணக்கார அம்மாஞ்சி வந்திருந்தார். சில புத்திமதிகள் கூறிவிட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டையும் கொடுத்தார். அப்போது அவர் 'அத்தான், பணத்தைச் செலவழிப்பதில் சிக்கனமாயிரு. முட்டாளிடமிருந்துதான் பணஞ் சீக்கிரம் பிரிந்துபோகும் என்னும் பழமொழியை மறவாதே என்றார்.

அத்தான் :—அம்மாஞ்சி, நீங்கள் சொல்லுவது ரொம்ப சரி. பிரத்தியக்ஷமான உண்மை.

ஆசிரியர் :—ராமு, பூமி சுற்றுகிறதென்பதை எப்படி நிரூபிப்பாய்?

ராமு :—நான் இரவில் ஓரிடத்தில் படுத்தால் காலையில் ஓர் இடத்தில் எழுந்திருக்கிறேன்; பூமி சுற்றுவதால்தான், ஸார்!

R. Kolandaisamy, G. O. C.

உபாத்தியாயர் :—நாளைக்கு இன்ஸ்பெக்டர் கேள்விகேட்டால், டக், டக் என்று பதில் சொல்லுங்கள்.

இன்ஸ்பெக்டர் :—(அடுத்தநாள்) பூமி என்ன உருவத்தில் இருக்கிறது?

பையன் :—டக், டக், ஸார்!

A. S. Savarinathan VI Std.

செட்டியார் :—உம்முடைய பத்திரிகையில் மரண அறிக்கைக்கு என்ன ஆகும்?

பத்திராதிபர் :—ஒரு அங்குலத்திற்கு இரண்டு ரூபாய் ஆகும்.

செட்டியார் :—ஆத்தே! என் அண்ணன் ஆறு அடி உயரமாச்சே!

C. Antoni.

POPLI BROTHERS

SIALKOT SPORTS EMPORIUM

76-77, West Tower Street, MADURA

Sole Distributors of :

"SPEEDO FLEX" STRINGS &
"SUPER DRIVE PRODUCTS"

Stockists of :

SLAZENGER . .
SPALDING .
DUNLOP . .
WISDEN . .
GOODWOOD . .
PROSSER . .
FULCRUM . .
Ayer's & Australian
T. FRAMES. . .

Manufacturers of :

Tennis, Badminton, Cricket Bats and Balls, Hockey Sticks & Balls, Volley Balls, Foot Balls, Basket Balls, Carrom Boards & Bagatelle Boards.

Specialists in :

CUPS, MEDALS, & TROPHIES

எங்களிடம் சகலமான விளையாட்டுசாமான்கள்
சரசமான விலையில் கிடைக்கும்

Reg. No. M. 1534.

OUR EMPLOYMENT BUREAU

WANTED immediately one male Secondary Grade Trained Teacher and also one male Higher Elementary Grade Trained Teacher.

Apply to: **Rev. Father A. FRANCIS REGIS,**
Manager,
R. C. Higher Elementary School,
Viragalur,
(*Via*)—Lalgudi, TRICHY Dt.

WANTED Two Secondary Grade Trained Teachers. Salary Rs. 25+2. Yearly increment Re. 1/- up to Rs. 35/-.

Apply to: **THE MANAGER,**
Jothi Kalvi Nilayam,
Fort, ERODE.

WANTED A Secondary Grade Trained Teacher for Holy Redeemer's Higher Elementary School. For particulars

Apply to: **THE MANAGER,**
Holy Redeemer's Church, **TRICHINOPOLY.**

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.